வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 02.02.2026 திங்கட்கிழமை இதழ் : 33 பக்கங்கள் : 08



தைப்பூச திருநாளான நேற்று யாழ்ப்பாணம் - இணுவில் கந்த சுவாமி ஆலயத்தில் பெருமஞ்சத்தில் முருகப்பெருமான் எழுந்த ருளிய காட்சி...

# 'கிவுல் ஓயா' திட்டத்துக்கு எதிராக இன்று போராட்டம்

## பெருந்திரளாக பங்கேற்குமாறு மக்களுக்கு அழைப்பு

வவுனியா, பெப்ரவரி. 02

**கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று திங்கட்கிழமை வவுனியா - நெடுங்கேணியில் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. இந்தப் போராட்டத்தில் தமிழ் மக்கள் பெருந்திரளாகப் பங்கேற்க வேண்டும் என்று ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.**

இன்று முற்பகல் 10 மணிக்கு நெடுங்கேணி பேருந்து நிலையம் முன்பாக ஒன்றுகூடும் போராட்டக்காரர்கள் அங்கிருந்து பேரணியாக நெடுங்கேணி பிரதேச செயலகம் நோக்கி நகர்ந்து ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பர். போராட்டத்தின் நிறைவில் மனு ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு இலங்கை தமிழ் அரசு கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, சிறீ ரெலோ உள்ளிட்ட அரசியல் கட்சிகள், வன்னி மாவட்ட பொது அமைப்புகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களை மையப்படுத்தி கிவுல் ஓயா திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது. இந்த மாவட்டங்களுக்கு தண்ணீரை இலகுவாகக் கிடைக்கச் செய்யும் நோக்கில் - மகாவலி எல் வலயத்தின் ஒரு பகுதியாக முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தின் மூலம் தமிழ்

07

ஜனாதிபதி செயலகம் முன்பாக

## உண்ணாவிரதமிருந்த இறுதிநபரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்

கொழும்பு, பெப். 02

ஜனாதிபதி செயலகம் முன்பாக சாகும் வரையிலான உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆறு பேர்களில் கடைசி பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தரும் நேற்றிரவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதற்கமைய, சாகும் வரையிலான உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த இலங்கை பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கத்தைச் சேர்ந்த ஆறு பேரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த உண்ணாவிரதப்

07

இந்தியாவின் வரவு - செலவு திட்டத்தில்

## இலங்கைக்கு உதவுவதற்கு 1,350 கோடி ரூபாய் ஒதுக்கீடு

புதுடில்லி, பெப். 02


வரவு - செலவு திட்டத்தின் மூலமாக இலங்கைக்கு உதவுவதற்கு 400 கோடி இந்திய ரூபாயை - நம் நாட்டு மதிப்பில் சுமார் ஆயிரத்து 350 கோடி ரூபாயை முன்மொழிந்துள்ளது இந்தியா.

இந்திய மத்திய அரசாங்கத்தின் 2026-27ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தை அந்த நாட்டின் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்

07

## இருபது - 20 உலகக் கிண்ணம் யாழில் காட்சிப்படுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், பெப். 02




இருபது - 20 கிரிக்கெட் உலகக் கிண்ணம் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டு பல இடங்களில் காட்சிக்கு

07

## மாகாண சபைகள் தேர்தல் இவ்வாண்டில் சாத்தியமில்லை

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, பெப். 02

மாகாண சபைகள் தேர்தலை இந்த ஆண்டு நடத்துவது சாத்தியமற்றது. இருப்பினும், தேர்தலை நடத்துவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார்.

"மாகாண சபைகள் தேர்தலை எந்தத் தேர்தல் முறைமையில் நடத்துவது என்பது தொடர்பில், ஆராய்ந்து விதப்புரைகளை முன்வைக்கும்

07

## இலங்கைக்கான வத்திக்கான் தூதுவராக புதியவர் நியமனம்

வத்திக்கான், பெப். 02



இலங்கைக்கான புதிய வத்திக்கான் தூதுவராக பேராயர் ஆண்ட்ரஜே ஜோஸ்வோவிஸ் திருத்தந்தை 14ஆம் லியோவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராயர் ஆண்ட்ரஜே ஜோஸ்வோவிஸ் 30 ஆண்டுகளுக்கும் மேலான சர்வதேச இராஜதந்திர பணி அனுபவம்

07

## புதன்கிழமை வரை வடக்கு, கிழக்கில் மழை தொடரும்!

யாழ்ப்பாணம், பெப். 02

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் தற்போது கிடைத்து வரும் மழை நாளை மறுதினம் புதன்கிழமை வரை தொடரும் என்று காலநிலை அவதானிப்பாளரும் யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை தலைவருமான பேராசிரியர் நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அவதானிப்பு குறிப்பில்,

இலங்கையின் தென்பகுதியில் நிலவும்

07

## மாகாண சபைகள் தேர்தல்; எதிர்க்கட்சி விசேட கவனம்

கொழும்பு, பெப். 02

மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் இன்றைய தினம் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கூடும் எதிர்க்கட்சியின் பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது என்று எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். அதில், "பாராளுமன்ற அமர்வு நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள நிலையில் அந்த வாரத்துக்குரிய

07

## பெண்களை இரவு பணியில் ஈடுபடுத்த புதிய ஒழுங்குகள்

### விசேட வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, பெப். 02

பெண்கள் இரவு பணியில் ஈடுபடுவது தொடர்பான புதிய ஒழுங்குவிதிகள் குறித்து அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

18 வயதுக்கு மேற்பட்ட பெண் சுகாதார தொழிலாளர்கள், உணவுச் சேவை துறையில் பணிபுரியும் பெண் கள் மாலை 6.00 மணி முதல் காலை 6.00 மணி வரை பணியாற்றுவது தொடர்பாக இந்த

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருபது - 20 உலகக் கிண்ணம் வவுனியா மக்கள் பார்வைக்கு

வவுனியா, பெப். 02

இருபது - 20 கிரிக்கெட் உலகக் கிண்ணம் நேற்றைய தினம் வவுனியாவில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது.

ரி-20 உலகக் கிண்ணம் இம்முறை இலங்கை, இந்தியாவில் நடைபெறவுள்ளது. இதையடுத்து, உலகக் கிண்ணம் நாட்டின் பல இடங்களில் மக்கள் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

இதன் ஓர் அங்கமாக நேற்றைய தினம் உலகக் கிண்ணம் வடக்கு மாகாணத்துக்கு எடுத்து வரப்பட்டது. இந்த உலகக் கிண்ணம் நேற்று வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது.

இதன்போது, ஏராளமான மக்கள் உலகக்கிணத்தை பார்வையிட்டதுடன், புகைப்படங்களையும் எடுத்தனர். (ஐ)




# நயினை கடலில் இந்தியர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி!

### இந்திய தூதரக அதிகாரிகளுக்கு காணொலி ஆதாரத்துடன் முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப். 02

நயினாதீவு - நெடுந்தீவுக்கு இடைப்பட்ட கடல்பரப்பில் நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் தொடர்பில் காணொலி ஆதாரங்களுடன் யாழ்ப்பாணம் இந்திய துணைத்தூதரகத்தின் அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நயினாதீவு கடற்றொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் இரவு குறித்த பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, அங்கு இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்திய மீனவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு நயினாதீவு மீனவர்கள் கூறினர் என்றும் அவ்வாறு கூறிய மீனவர்கள் மீது இந்திய மீனவர்கள் கல்வீச்சு தாக்குதல் நடத்தினர் எனவும் கூறப்படுகிறது.

இந்தநிலையில், இந்திய தூதரக அதிகாரி ஒருவரை கைபேசி மூலமாக தொடர்பு கொண்ட நயினாதீவு மீனவர் ஒருவர், இந்திய மீனவர்களின் அத்துமீறலை காணொலி மூலம் காட்டியுள்ளார். இதேநேரம், இந்திய மீனவர்கள் தங்கள் படகின் தொடர் இலக்கத்தை அழித்தே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்று கூறப்படுகிறது.

(ஐ)

## சகல இனத்தவரும் ஒன்றிணைந்த யூனியன் கல்லூரி பொங்கல் விழா


யாழ்ப்பாணம், பெப். 02

சகல இனத்தவர்களும் ஒன்றிணைந்த பொங்கல் விழா தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தப் பொங்கல் விழா கல்லூரியின் அதிபர் தி. வரதன் தலைமையில் நடைபெற்றது.

அநுராதபுரம் - கெக்கிராவை - திறப்பனை கல்வி வலயத்தின் அதிபர்கள், கல்வி அதிகாரிகள், மாணவர்கள் மற்றும் வலிகாமம் வலய பிரதி கல்விப்பணிப்பாளர் சிவநேசன் ஆகியோர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

சிங்கள, முஸ்லிம், தமிழ் இனங்களை சேர்ந்த அவர்கள் பாரம்பரிய இனியம் இசையுடன் வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து பொங்கல் விழா நடைபெற்றது. அத்துடன், கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.



(ஐ)

## சிறீதரனின் வாகன சாரதிக்கு பிணை!

தென்மராட்சி, பெப். 02

விபத்தை ஏற்படுத்தி இருவரை காயப்படுத்திய வழக்கில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பி னர் சி. சிறீதரனின் சாரதி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தலா ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான இரு சரீர பிணைகளில் செல்வதற்கு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

அத்துடன், இந்த வழக்கு எதிர்வரும் 27ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

சிறீதரன் எம். பி. நேற்று முன் தினம் பயணித்த வாகனம் மீசாலை பகுதியில் உந்துருளியுடன் விபத்துக்கு உள்ளானது. இந்த விபத்தில் தந்தையும் அவரின் 10 வய தான மகனும் காயமடைந்தனர். விபத்தில் காயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(ஐ)

## ஆழியவளை சக்தியம்மன் ஆலய அன்னதான மண்டபம் திறப்பு

வடமராட்சி, பெப். 02

வடமராட்சி கிழக்கு - ஆழியவளை சக்தி அம்மன் ஆலய அன்னதான மண்டபம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

ஆலயத்தின் தலைவர் பொன்னுச்சாமி பிரேமதாஸ் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் பதில் பொதுச்செயலர் எம்.ஏ.சுமந்திரன் மண்டபத்தை நாடா வெட்டி திறந்து வைத்தார்.

இந்தநிகழ்வில் விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் உதயகுமார் யுகதீஸ், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச. சுகிர்தன், மருத்துவர் வேலுப்பிள்ளை சிவநேசன், சமாதான நீதிவான் ஜெயபால கிருஷ்ணன், காணி நன்கொடையாளி பொன்னையா பெரியதம்பி மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-08)



## மிருசுவில் முருகன் ஆலயத்தில் தைப்பூசம்

தென்மராட்சி, பெப். 02

தென்மராட்சி - மிருசுவில் - மன்னன்குறிச்சி தான்தோன்றி முருகன் ஆலய தைப்பூச விசேபூசை வழிபாடு நேற்று நடைபெற்றது.

காலை விசேட பூசைகளுடன் வசந்த மண்டப பூசை நடைபெற்று முருகன் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இந்த விசேட பூசையில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

மன்னன்குறிச்சி தான்தோன்றி முருகன் ஆலயத்தில் ஒவ்வோர் ஆண்டும் தைப்பூச பூசை விமர்சையாக நடைபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நியூட்டனின் 3ஆம் இயக்க விதியை முன்னரே கூறியவர் திருவள்ளுவர்!

### ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

வவுனியா, பெப். 02

"நவீன அறிவியல் விஞ்ஞானி ஐசக் நியூட்டன் கண்டுபிடித்த மூன்றாம் விதியை பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தனது திருக்குறளின் ஊடாக உலகுக்கு சொன்னவர் தெய்வப் புலவர் திருவள்ளுவர். மனித குலத்துக்கு முற்றிலும் பொருந்தக்கூடிய வாழ்வியல் நெறிகளைத் தன்னகத்தே கொண்ட ஒரு பொக்கிஷமாகத் திருக்குறள் விளங்குகின்றது", இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

மொறிசியஸ் சர்வதேச திருக்குறள் மன்றம், வவுனியா பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் சர்வதேச தமிழ்ப் பண்பாட்டு மையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், "மனித மாண்பு" எனும் தொனிப்பொருளிலான 7ஆவது சர்வதேச திருக்குறள் மாநாட்டின் முதலாம் நாள் நிகழ்வு வவுனியா பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"திருக்குறளில் கூறப்பட்டுள்ள அறிவியல் சார்ந்த கருத்துகளைத் தற்காலக் கண்டுபிடிப்புகளுடன் ஒப்பிடும்போது, வள்ளுவரின் தீர்க்கதரிசனம் எம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. உதாரணமாக, "ஒவ்வொரு வினைக்கும் அதற்கு இணையான எதிர்வினை உண்டு" என்ற நியூட்டனின் மூன்றாம் விதியை, வள்ளுவர் அன்றே, "பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா பிற்பகல் தாமே வரும்" என்ற குறளின் மூலம் மிக எளிமையாக விளக்கியுள்ளார். நாம் ஒருவருக்குத் துன்பம் இழைத்தால், அது நிச்சயம் நமக்கே திரும்பி வரும் என்ற வாழ்வியல் உண்மையை அறிவியல்பூர்வமாக அவர் அன்றே எடுத்துரைத்துள்ளார்.

மனிதன் எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது, அவ்வாறு செய்தால் கிடைக்கும் பயன்கள் என்ன என்பதைத் தெள்ளத் தெளிவாகக் கூறும் நூல் திருக்குறள். மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு வள்ளுவர் வகுத்த பாதை மிக அழகானது. "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்று அவர் கூறியது போல, அறநெறியில் நின்று வாழும் மனிதன், வானுலகில் உள்ள தெய்வத்திற்கு இணையாகப் போற்றப்படுவான். இத்தகைய உயரிய மனித மாண்புகளை போற்றும் திருக்குறளைப் படித்து, அதன் படி நடப்பவர்கள் வாழ்வில் சகல நலன்களையும் பெறுவார்கள் - என்றார்.

(ஐ)

## இரணைமடு குளத்தின் 8 வான்கதவுகள் திறப்பு

கிளிநொச்சி, பெப். 02

இரணைமடுக் குளத்தின் 8 வான் கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன.

வடக்கின் பல பகுதிகளிலும் நேற்றைய தினம் கனமழை பெய்து வருகிறது. இதனால், இரணைமடுக் குளத்துக்கு தண்ணீர்வரத்து அதிகரித்துள்ளது.

தற்போது குளத்தின் கொள்ளளவு 36.6 அடியாக உள்ளது. இதனால், இரணைமடு குளத்தின் 8 வான் கதவுகளும் 0.5 அங்குலம் திறக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

## முத்துஐயன்கட்டு குளத்துக்கு தண்ணீர் வரத்து அதிகரிப்பு!

முல்லைத்தீவு, பெப். 02

முல்லைத்தீவில் அதிக மழை வீழ்ச்சியால் முத்துஐயன்கட்டு குளத்துக்கான நீர் வரத்து அதிகரித்துள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நிலைமையைக் கருத்தில் கொண்டு, குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட வாய்ப்புள்ளது. எனவே, குளத்தின் தாழ்நில பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களும் விவசாயிகளும் அவதானமாக இருந்து தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அந்த நிலையம் அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
02.02.2026 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், தை 19

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# கவனிப்பாரற்ற தமிழர் அரசியல்

அவ்வப்போது தமிழர் அரசியலில் சில சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன அதவாது, தையிட்டிக்கு எதிர்ப்பு, காணி அபகரிப்புக்கு எதிர்ப்பு, இப்போது வவுனியாவில் கிவுல் ஓயாத் திட்டத்துக்கு எதிர்ப்பு. அரசாங்கத்தின் ஒரு திட்டத்தால் தமிழ் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். அதவாது, கிடைக்கும் நன்மைகளை விடவும் பாதிப்பு அதிகமாக இருக்கிறது என்றால் அதனை எதிர்ப்பதும் அதற்கு மாற்றான திட்டம் ஒன்றை முன்வைப்பதும் குறிப்பிட்ட மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் தலைமைகளின் பணியாகும்.

ஆனால், ஒரு விடயத்தை எதிர்க்கின்றபோது, அந்த எதிர்ப்பைக் கண்டு அரசாங்கம் யோசிக்க வேண்டும். அத்துடன், மூன்றாம் தரப்புகளும் தமிழ் மக்கள் பற்றி யோசிப்பதாக இருக்க வேண்டும். ஆனால், யுத்தம் முடிவுற்று பதினாறு ஆண்டுகள் முடிவுற்ற பின்னரும் கூட தமிழர் அரசியல் ஜனநாயக ரீதியில் ஒரு சக்தியாகத் திரட்சிபெறவில்லை. இந்தக் காலத்தில் "எழுக தமிழ்", "பொத்துவில் தொடங்கி பொலிகண்டி" என்று சில மக்களை திரட்டும் நிகழ்வுகளை முன்னெடுத்திருந்தாலும்கூட, அவை ஒரு ஜனநாயக அரசியல் பலமாக திரட்சி பெறவில்லை. நிகழ்வுகளுடன் அனைத்தும் முடிந்து போவதாகவே இருந்தது.

இந்த நிலையில் ஈழத் தமிழர் அரசியல் இலங்கையில் உற்றுநோக்கத்தக்க தனித்துவமான அரசியல் என்னும் தகுதியை இழந்துவிட்டது. ஒரு ஜனநாயக தரப்பு மற்றவர்களால் கருத்தில் கொள்ளத்தக்க நிலையில் இருந்தால்தான் இலங்கைத் தீவில் தலையீடு செய்யும் வெளித்தரப்புகள் தமிழர்களும் கருத்தில் கொள்ளத்தக்க நிலையில் இருக்கிறார்கள் என்னும் நிலைப்பாட்டுக்கு வரும்.

இந்த உலக அரசியலில் எந்தவொரு நாடும் தங்களுடைய நலன்களுக்கு அப்பால் எதனையும் உற்றுநோக்குவதில்லை. அவர்களின் நலன் சார் ஆட்டத்துக்கு ஒன்று தேவை என்றால் மட்டும்தான் மற்றவர்களைப் பற்றி யோசிப்பார்கள். இதுதான் உலக அரசியல் நியதி. இந்த உண்மையை புறந்தள்ளிவிட்டு வசதியாக இருந்து கொண்டு கற்பனை செய்வதால் பயனில்லை. இன்று நடைபெறும் பெரும்பாலான அரசியல் உரையாடல்கள் அனைத்துமே தலையை விட்டுவிட்டு வாலை பிடிக்கும் உரையாடல்களாகவே இருக்கின்றன.

இன்றைய உலகில் இடம்பெறும் விடயங்கள் ஐக்கிய நாடுகள் சபையை அரசியல் ரீதியில் ஒன்றுமில்லை என்னும் நிலைமையை ஏற்படுத்திவிட்டது. எதிர்காலத்தில் பலம்பொருந்திய நாடுகள் ஐ. நா. வின் எந்தவொரு விடயத்தையும் கவனத்தில் கொள்ளப் போவதில்லை. இவ்வாறானதொரு நிலையில் ஈழத் தமிழர்களுக்கான புறவுலக ஆதரவு என்பது ஒன்றுமில்லை. மாகாண சபைகள் முறைமை தொடர்பில் இந்தியா தொடர்ந்தும் பேசிவருகிறது. ஆனாலும் இந்தியா அதற்காகக் கடுமையான அழுத்தங்களை இலங்கைமீது பிரயோகிக்கக்கூடிய நிலை இல்லை. ஆனால், கொள்கை நிலைப்பாடாகக் கூறிக்கொண்டிருக்கும். இது ஒன்றுதான் வெளியக ஆதரவாக இருக்கிறது. இந்த நிலையில் முதலில் அவர், இவர் என்னும் நம்பிக்கையை விடுத்து ஈழத் தமிழர் அரசியல் கவனிக்கக்கூடிய அரசியல் என்னும் நிலைமையை தமிழ் தலைமைகள் என்போர் ஏற்படுத்த வேண்டும். அவ்வாறில்லாது போனால் காலப்போக்கில் ஈழத் தமிழரின் அரசியல் கோரிக்கை ஒரு பொருட்டாகவே இருக்காது. இந்தப் பின்னணியில், தென்னிலங்கை எதற்காக அரசியல் தீர்வு தொடர்பில் யோசிக்க வேண்டும்.

# பொலிஸ் நிலையத்திலிருந்து துப்பாக்கி, தோட்டா மாயம்!

*கொழும்பு, பெப். 02*

பொலிஸ் நிலையத்தில் இருந்த கைத்துப்பாக்கி ஒன்றும் 10 தோட்டாகளும் காணாமல் போயுள்ளன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

களுத்துறை - மத்துகம பொலிஸ் நிலையத்தின் உப சேவை பொறுப்பில் இருந்த கைத்துப்பாக்கியும் 10 தோட்டாக்களும் அடங்கிய மெகஸின் ஒன்றுமே இவ்வாறு காணாமல் போயுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

ஆவணங்களைப் பரிசோதித்த போதே, கடந்த ஜனவரி 26 ஆம் திகதி முதல் அவை காணாமல் போன விடயம் தெரியவந்துள்ளது. இது தொடர்பில் மத்துகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

(ஐ)

## கம்பஹாவில் உயர் மின்னழுத்த கம்பி கம்பத்துடன் விழுந்ததில் பலர் காயம்

*கொழும்பு, பெப். 02*

கம்பஹா, மிரிஸ்வத்த நகரின் மையத்தில் கொழும்பு - கண்டி வீதியில் உயர் மின்னழுத்த மின்கம்பி கம்பத்துடன் கூடிய மின்மாற்றி ஒன்று சரிந்து விழுந்ததில், வீதியில் பயணித்த ஒரு வாகனம் சேதமடைந்து பலர் காயமடைந்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணியளவில் மின் கம்பம் திடீரென சரிந்து விழுந்தது. காயமடைந்தவர்கள் கம்பஹா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதனால், கொழும்பு - கண்டி வீதியில் மிரிஸ்வத்த, பெலும்மஹார மற்றும் யக்கல போன்ற நகரங்களில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. மேலும் மிரிஸ்வத்தி லிருந்து கண்டி நோக்கி செல்லும் ஒரு வீதியை மூட பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.(எ)

## 5 கிலோ ஹெரோயினுடன் இருவர் கைது!

*கொழும்பு, பெப். 02*

பெந்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தின் அதிகாரிகளுக்கு நேற்று அதிகாலை கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பெருமளவு ஹெரோயின் போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது, 5 கிலோ 105 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் இரண்டு சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 40 மற்றும் 45 வயதுடைய பெந்தோட்டைப் பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(எ)

# கார்கள் விபத்தில் ஐவர் காயம்!

*கொழும்பு, பெப். 02*

இரு கார்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் ஐவர் காயங்களுக்கு உள்ளாகினர்.

அநுராதபுரம் - கற்குளம் பொலிஸ் வீதித் தடைக்கு அருகே நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அநுராதபுரம் நகரில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த இளைஞர்கள் நால்வர் பயணித்த காரும், களனியிலிருந்து அநுராதபுரத்துக்கு வழிபாட்டுக்காக ஒரே குடும்பத்தினர் பயணித்த காரும் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வளைவான வீதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்தே இந்த விபத்து இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் காயமடைந்தவர்கள் அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(ஐ)

# கட்டளையை மீறி சென்ற டிப்பர்மீது துப்பாக்கிச்சூடு

*கிளிநொச்சி, பெப். 02*

பொலிஸாரின் கட்டளையை மீறிப் பயணித்த டிப்பர் வாகனத்தின்மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கிளிநொச்சி - தருமபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனத்தின்மீதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. வாகனத்தின் ரயர்களை இலக்கு வைத்தே துப்பாக்கிச்சூடு நடத்தப் பட்டதாகக் கூறப்படுகிறது.

துப்பாக்கிச்சூட்டை அடுத்து வாகனத்தின் சாரதி டிப்பரை அங்கேயே நிறுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## இஞ்சியின் விலை உயர்வு

*கொழும்பு, பெப். 02*

உள்ளூர் சந்தையில் இஞ்சியின் விலை சடுதியாக அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்னர்.

வழமையாக ஒரு கிலோ இஞ்சி 300 தொடக்கம் 500 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்டது. இந்த நிலையில், தற்போது இஞ்சி ஒரு கிலோ 1500 தொடக்கம் 2000 ரூபாய் வரை அதிகரித்து விற்பனை செய்யப்படுகிறது.

டித்வா புயலால் இஞ்சிச் செய்கைகள் அழிவடைந்ததன் காரணமாக உள்ளூர் சந்தைகளில் இஞ்சிக்கு தட்டுப்பாடு நிலவுவதாகக் கூறப்படுகிறது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



பெப்ரவரி - 02 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம் - தை 19
நல்ல நேரம் : 7.31 - 9.00
ராகு காலம் : 4.30-6.00
திதி : பவுர்ணமி




**மேடம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். மகளுக்கு நல்லவரன் அமையும். புது வேலை கிடைக்கும். தாய் வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்படும். நட்பு வட்டம் விரியும். உழைப்பால் உயரும் நாள்.

**இடபம்**
குடும்பத்தினருடன் மனம்விட்டு பேசி மகிழ்வீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். தோற்றப்பொலிவு கூடும். நண்பர்களால் ஆதாயம் பெருகும்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். எதிர்பார்த்த உதவிகள் தாமதமாகும். யாரையும் எடுத்தெறிந்து பேச வேண்டாம். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள்.

**கன்னி**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். சபைகளில் மதிக்கப்படுவீர்கள். விருந்தினரின் வருகையால் வீடு களை கட்டும்.

**துலாம்**
சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். பிள்ளைகளின் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும். உறவினர் நண்பர்களால் அனுகூலம் உண்டு. விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள்.

**விருட்சிகம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். வெளிவட்டாரத்தில் நல்ல நண்பர்கள் உதவிகள் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். வாக்குறுதிகளை நிறைவேற்றப் போராட வேண்டி இருக்கும்.

**மகரம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். சகோதர வகையில் நன்மை உண்டு. கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். தாயார் ஆதரித்து பேசுவார்.

**கும்பம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உங்களால் மற்றவர்கள் பயனடைவார்கள். புது பொருள் வந்து சேரும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும்.

**மீனம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். கனவு நனவாகும் நாள்.

# யாழ். நகரை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் உரிய நடவடிக்கை

## அரசாங்க அதிபர் பிரதீபன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 02

யாழ்ப்பாணம் நகரத்தை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்துள்ளது என்று அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

யாழ். நகர அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பதற்கான பங்குதாரர்களின் கருத்துகளை கேட்டறிந்து கொள்வதற்கான பங்குதாரர் ஆலோசனைக் கூட்டம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர் கூறுகையில், "நகர அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிப்பதற்கான கலந்துரையாடல் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளுக்கு இடையில் கடந்தாண்டு இறுதியில் நடத்தப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் நானும் கலந்து கொண்டேன். இலங்கையில் 10 நகரங்களையும் அபிவிருத்தி செய்வதற்காக இவ்வாண்டு வரவு- செலவுத் திட்டத்தில் 2000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தில் இந்தத் திட்டத்துக்காக யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா நகரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. நகரங்களை அபிவிருத்தி செய்வதற்கான நடைமுறைகள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. யாழ்ப்பாண மாவட்ட துறை சார்ந்த திணைக்கள அதிகாரிகள், அரசியல் பிரதிநிதிகள், சமூக மட்ட பிரதிநிதிகள் ஆகியோருக்கு இந்தத் திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தி ஆலோசனைகளை பெறவேண்டிய தேவைப்பாட்டினை தெரிவித்திருந்தேன். இதனடிப்படையில் தொடர்புடைய பங்குதாரர்களின் கருத்துக்களை கேட்டறியும் நோக்கிலும் இந்தச் செயல் திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதியை முன்னுரிமை வழங்க வேண்டிய திட்டங்களை அடையாளம் கண்டு திறம்பட பயன்படுத்துவது தொடர்பிலும் ஆராயும் நோக்கத்துடன் இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது"- என்றார்.

(எ)

# வீதிக் கடமைகளில் ஈடுபட்டுவரும் யாழ்.பொலிஸாரின் முறைகேடுகள்

யாழ்ப்பாணம், பெப். 02

வீதிக் கடமையில் ஈடுபடுகின்ற பொலிஸார் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுவதாக

பொதுமகனால் குற்றச்சாட்டப்பட்டது. அந்த விடயத்தை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்வேன் என பாராளுமன்ற உறுப்பினரும் வலி. மேற்கு அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான சிறீ பவானந்தராஜா தெரிவித்துள்ளார். வலிகாமம் மேற்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டமானது சிறீ பவானந்தாராஜா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது குறித்த விடயம் பேசப்பட்டது. குறித்த பொதுமகன் அங்கு மேலும் தெரிவிக்கையில், இரவு கடமையில் ஈடுபடும் பொலிஸார் சாரதிகளின் கண்களில் வெளிச்சத்தை பாய்ச்சி வாகனங்களை மறிக்கின்றனர். அத்துடன் பொலிஸார் தமது வாகனங்களின் நிறுத்தல் விளக்குகளை ஒளிரவிடாமல் இருட்டில்வாகனங்களை நிறுத்துகின்றனர்.

ஆகவே இதனை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும்- என்றார்.

இதற்கு பதிலளித்த ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்,

குறித்த விடயத்தை நானும் அவதானித்துள்ளேன். இதனை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் கவனத்திற்கு எழுத்து மூலம் கொண்டு சென்று நடவடிக்கை எடுப்பேன்-என்றார். (அ)

# இலக்கிய போட்டியில் வவுனியா மாணவி தேசிய ரீதியில் முதலிடம் பெற்று சாதனை

வவுனியா, பெப். 02

தேசிய இலக்கிய போட்டியில் வவுனியா இராசேந்திரங் குளம் அ. த. க. பாடசாலை மாணவி தேசிய ரீதியில் முதலிடம் பெற்று சாதனை படைத் துள்ளார்.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த தேசிய இலக்கிய போட்டித் தொடரில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான விருதுகளும் சான்றிதழ்களும் கொழும்பு ஆனந்தா கல்லூரியில் நடைபெற்ற தேசிய இலக்கிய விழாவின் போது வழங்கப் பட்டன.

இதன்போது, வவுனியா தெற்கு வலயத்தை சேர்ந்த இராசேந்திரங்குளம் அ. த. க. பாடசாலை மாணவி பிரபாகரன் வினுசா கனிஷ்ட பிரிவில் பாடல் நயத்தல் போட்டியில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தையும் பணப் பரிசில்களையும் பெற்றுக் கொண்டார்.

# நல்லை ஆதீனத்தில் இலவச கலைவகுப்பு

யாழ்ப்பாணம், பெப். 02

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் இலவச கலைவகுப்புகள் நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் துறைசார் நிபுணத்துவம் பெற்ற வளவாளர்களால் வாராந்தம் நடத்தப்பட்டு வருகின்றன. மிருதங்கம், வயலின், பண்ணிசை, கர்நாடக சங்கீதம், வீணை, பரதநாட்டியம், யோகாசனம், சிலம்பம் ஆகிய வகுப்புகளில் தரம் 01 தொடக்கம் உயர்தரம் வரை கல்வி கற்கும் மாணவர்கள் மற்றும் ஆண்கள், பெண்கள் இருபாலரும் கலந்துகொண்டு பயன் பெற்றுக்கொள்ள முடியும். பதிவுகளை மேற்கொள்ள காலை 09. 00 மணி முதல் மாலை 04. 00 மணிவரை விண்ணப்பப்படிவங்களை பெற்று பதிவு செய்து கொள்ள முடியும் என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர்

# "அநுர ஆட்சியில் ஓர் அரசியல் கைதி கூட விடுவிக்கப்படவில்லை"

யாழ்ப்பாணம், பெப். 02

கடந்த ஆட்சிக் காலங்களில் ஏதோ ஒரு வகையில் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுக் கொண்டிருந்தனர். ஆனால், தற்போதுள்ள ஆட்சியில் இதுவரை எந்த ஓர் அரசியல் கைதியும் விடுதலை செய்யப்படவில்லை ன்று குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் முன்னெடுக்கப்பட்ட "நீதிக்கான சாட்சி" என்ற நூதனப் போராட்டத்தில் கலந்து கொண்டு சாட்சி உரைக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழர்களின் விடுதலை போராட்டத்தின் பேரிலே இன்றும் அரசியல் கைதிகள் சிறைகளில் சொல்லொணா துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். 30 வருடங்களை கடந்து 31ஆவது வருடத்தில் அரசியல் கைதிகளின் துயர வாழ்க்கை ஆரம்பிக்கிறது.

இன்னமும் பத்து அரசியல் கைதிகள் சிறைகளில் வாடுகின்றனர். அவர்களில் சிவகுமார் பார்த்திபன் என்பவர் 30 வருடங்களுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்து வருகின்றார். அரசியல் கைதிகளின் ஆயுள் குறைந்து செல்கின்றது.

30 ஆண்டுகள் என்பது ஒரு மனிதனுடைய வாழ்க்கையின் அரைவாசி காலம். மீதி காலத்திலாவது அவர்கள் தமது உறவுகளுடன் சேர்ந்து வாழ வேண்டும் என துடிதுடித்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த வலிகளை அனுபவித்ததில் நானும் ஒருவன் என்ற வகையில் இந்த பொறுப்பான கடமைகளை செய்ய வேண்டிய நிலையில்காணப்படுகின்றேன்.

அரசியல் ரீதியான தீர்மானங்களை எடுத்து அரசியல் கைதிகளின் விடுதலை உறுதிப்படுத்தப்பட வேண்டும்."- என்றார்.

(எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தளம் கடற்றொழிலாளர்மீது இந்திய கடற்படை தாக்குதல்

### நால்வர் மருத்துவமனையில்

கொழும்பு, பெப். 02

புத்தளத்தில் இருந்து கடலுக்கு இரு மீன்பிடிப் படகுகளில் சென்ற 12 கடற்றொழிலாளர்மீது இந்திய கடற்படையினர் தாக்குதல் நடத்தினர் என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி புத்தளம் - வென்னப் புவவிலிருந்து கடற்றொழிலுக்கு சென்றவர்கள் சர்வதேச கடற் பரப்பில் தொழிலை முடித்து விட்டு கடந்த 28ஆம் திகதி நாடு திரும்பி கொண்டிருந்த போது இந்திய கடற்படை கப்பலால் மறிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கடற்றொழிலாளர்களிடம் போதைப்பொருள் இருக்கிறதா என்று கேட்டு, இந்திய கடற்படையினர் அவர்களை கடுமையாக தாக்கினர் என்று பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் குற்றஞ்சுமத்தியுள் ளனர்.

இந்தத் தாக்குதலில் நால்வர் பலத்த காயமடைந்தனர் என்றும் பின்னர் அவர்கள் இலங்கை கடற்படையின் உதவியுடன் நேற்று முன்தினம் நாட்டை வந்தடைந்தனர் என்று கூறப்படுகிறது. காயமடைந்தவர்கள் காலி கராப்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, இந்த சம்பவம் குறித்து கருத்து தெரிவித்த கடற்றொழில் பிரதி அமைச்சர் ரத்ன கமகே, இந்த விவகாரம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள கடற்படை மற்றும் வெளிவிவகார அமைச்சுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகக் கூறினார். (ஐ)

## வெளிநாடு அனுப்புவதாகக்கூறி மோசடியில் ஈடுபட்ட நபர் கைது!

கொழும்பு, பெப். 02

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பணம் மோசடி செய்த சந்தேக நபர் ஒருவர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுளளார்.

சந்தேக நபர், ஐக்கிய இராச்சி யத்தில் வேலை வாங்கித் தருவதாக வாக்குறுதி அளித்து 10 இலட்சம் ரூபாயை மோசடி செய்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மாத்தறை பிரிவின் அதிகாரிகள், குறித்த நபரை திக்வெல்ல - வெஹெல்ல பகுதியில் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் வெஹெல்ல, உருகமுவ பகுதியை சேர்ந்த 45 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. குற்றப் புலனாய்வு திணைக்களம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (ஐ)

## குற்றங்களுடன் தொடர்பு; 779 பேர் கைது

கொழும்பு, பெப். 02

பொலிஸார் நேற்று முன்தினம் முன்னெடுத்த விசேட நடவடிக்கையில் 779 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

28 ஆயிரத்து 526 பேர் பரிசோதிக்கப்பட்டனர் கைதானவர்களில் 11 பேர் குற்றங்களுடன் நேரடி தொடர்புடையவர் கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். மேலும், கைதானவர்களில் 257 பேர் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள். 177 பேர் திறந்த பிடியாணை பிறப்பிக்கப் பட்டவர்களாவர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 441 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 60 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4 ஆயிரத்து 39 பேருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டது. (ஐ)

## கார் விபத்தில் முதியவர் மரணம்

கொழும்பு, பெப். 02

வீடொன்றில் நிறுத்த முற்பட்ட கார் கட்டுப்பாட்டை இழந்து வீட்டுச் சுவரோடு மோதியதில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

காலி - மில்டன் குணவர்த்தன மாவத்தையில் இடம்பெற்ற பகுதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கராபிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் முதியவர் உயிரிழந்தார். (ஐ)

## பணமோசடியில் ஈடுபட்ட இளைஞர் சி. ஐ. டியால் கைது

கொழும்பு, பெப். 02

பணமோசடி சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞரை குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

8 கோடியே 80 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான 9 இரத்தின கற்களை பெற்று அதற்காக 6 கோடியே 46 இலட்சம் ரூபாய்க்கு காசோலைகளை வழங்கிய குற்றத்துக்காகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கமைய, முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளிலேயே கொழும்பு - கொள்ளுப்பிட்டி பகுதியில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் கொள்ளுப்பிட்டியை சேர்ந்த 29 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. குற்றப் புலனாய்வு திணைக்களம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (ஐ)

## நாட்டின் எதிர்காலத்தை பாதுகாப்பதற்கு உயர்தர மனித வளத்தை உருவாக்குவோம்

### பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு. பெப். 02

நாட்டின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கு உயர்தரமான மனித வளத் தளத்தை உருவாக்குவது அவசியம். அந்த முயற்சிக்கு கல்விதான் மையப் புள்ளி என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற கல்விச் சேவை ஊழியர் கூட்டுறவுச்சங்கத்தின்("ஈ.டி.சி.எஸ்) சிசு நேன பிரணாம" புலமைப் பரிசில் வழங்கும் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், வேகமாக மாறிவரும் உலகளாவிய பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்ளும் வகையில், பாடசாலை மட்டத்திலிருந்தே கல்வியைப் பலப்படுத்த அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 3 இலட்சம் மாணவர்கள் ஆரம்ப கல்வியில் நுழைகிறார்கள், ஆனால் சுமார் 40 ஆயிரம் பேரே அரச பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகின்றனர்.

இந்த வாய்ப்பைப் பெறும் மாணவர்கள் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக்கொண்டு தேசிய வளர்ச்சிக்குப் பங்களிக்க வேண்டும் - என்றார்.

## ஆளும் கட்சி எம். பி.க்கு எதிராக அஜித் ராஜபக்ஷ முறைப்பாடு!

கொழும்பு, பெப். 02

முன்னாள் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, தேசிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பத்மகுமாரவுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளார்.

சமீபத்தில் நடைபெற்ற இரத்தினபுரி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், "டித்வா" புயலால் ஏற்பட்ட அனர்த்த நிலைமையைப் பயன்படுத்தி, அஜித் ராஜபக்ஷ மோசடியான முறையில் நிவாரண காசோலைகளை பெற்றுள்ளதாக சாந்த பத்மகுமார கருத்து வெளியிட்டிருந்தார். இந்தக் குற்றச்சாட்டுக்கு எதிராகவே இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து அஜித் ராஜபக்ஷ மேலும் தெரிவிக்கையில்:

"எனது பெயர் மற்றும் நான் வகித்த கௌரவமான பதவிகளைப் பயன்படுத்தி, எனக்குப் பாரிய அவதூறு ஏற்படும் வகையில் சாந்த பத்மகுமார இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார். டித்வா புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும்நிவாரணக்காசோலையை நான் பெற்றுக்கொண்டதாக அவர் கூறுகிறார். சாந்த பத்ம குமாரவின் நடத்தை பற்றி நாடு முழுவதும் அறியும்.

நான் தற்போது எம்பிலிப்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவில் வசித்து வருகிறேன்.

எனக் குத் தெரிந்தவரை டித்வா புய லால் யாருக்கும் சேதம் ஏற்ப ட வில்லை, அப்படி ஒரு தகவலும் எனக்குக் கிடைக்கவில்லை. எனக்கு ஒரு சதமேனும் நட்டம் ஏற்படவில்லை எனும்போது, நான் யாரிடம் போய் நிவாரணம் கோருவேன்? இந்த அப்பட்டமான பொய்க் குற்றச்சாட்டினால் எனக்கு ஏற்பட்ட அவதூறுக்கு எதிராக நான் நிச்சயமாக சட்ட நடவடிக்கை எடுப்பேன்." - என்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிவுல் ஓயா திட்டத்தை எதிர்க்க அனைவரும் ஒன்றுபட வேண்டும்

## தமிழ் அரசு கட்சி அழைப்பு

மட்டக்களப்பு,பெப். 02

கிவுல் ஓயா திட்டத்தை எதிர்க்க நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் அழைப்பு விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு- சித்தாண்டி சமூக ஒன்றியம் நடத்திய மாபெரும் பொங்கல் விழாவும் கௌரவிப்பு நிகழ்வும் சித்தாண்டி சிறீ சித்திர வேலாயுத ஆலய முன்றலில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன கலந்து கொண்டார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், "தற்போது அரசாங்கம் கிவுல் ஓயா திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்கின்றது. இதில், வவுனியா மாவட்டத்தில் தமிழர்களுக்கு சொந்தமான கிட்டத்தட்ட 13, 000 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பை அழித்து மணலாறு பிரதேசத்தில் குடியமர்த்தப்பட்ட 4,000 சிங்கள குடும்பங்களுக்கு நீர் வழங்க இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தத் திட்டம் முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ காலத்தில் கொண்டு வர எத்தனிக்கப்பட்ட போது தடுத்து நிறுத்தப்பட்டன.

கடந்த ஆட்சிக் காலத்தில் சித்தாண்டியில் மயிலத்தமடு-மாதவனை பிரச்னை காரணமாக பல தமிழ்ப் பண்ணையாளர்கள் பாதிக்கப்பட்டனர். இதற்கான எதிர்ப்பினை சென்ற ஆண்டுகளில் தனி ஒரு பாராளுமன்ற உறுப்பினராக நீதியை நிலை நாட்டும் நோக்கில் இன்றளவிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றேன்.

இப் பிரச்னை முற்றுப்பெற்ற விடயமாக காணப்படினும் அது இன்று வரை முடியவில்லை. 15 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் இப் பிரச்னைகள் மீள உருவெடுக்கின்றதோ அதே போல மயிலத்தமடு -மாதவனை பிரச்னையும் உருவெடுக்கும்.

மிகுந்த சிரமப்பட்டு நாங்கள் மயிலத்தமடு- மாதவனை பிரச்னையை முடிவுக்கு கொண்டு வந்ததை சிலர் மறந்து விட்டனர். ஆனால், இந்த நிலம் சம்மந்தமான போராட்டங்களை நாம் முன்னெடுப்பது பண்ணையாளர்களுக்காகவோ, தனிப்பட்ட குழுவினருக்காகவோ அல்ல மாறாக தமிழினத்துக்காகவே- எமது மக்களுக்காகவே. கிவுல் ஓயா திட்டத்தை முழுமையாக முறியடிக்க தமிழ் மக்களாகிய நாம் ஒன்றிணைய வேண்டும். ஒற்றுமையே எமது பலம்"- என்றார்.

(எ)

# 40 வருடங்களின் பின்னர் மாங்காடு வீதி புனரமைப்பு

மட்டக்களப்பு, பெப். 02

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்குட்பட்ட மாங்காடு விதானையார் வீதி கடந்த 40 வருடங்களாக கவனிப்பாரற்ற நிலையில் பற்றைக்காடாக காணப்பட்டது.

இதனால், அப்பிரதேசத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் பல சவால்களை எதிர்கொண்டு வந்த நிலையில், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை தவிசாளரிடம் அப்பகுதி மக்கள் இது குறித்து எடுத்துக் கூறியதையடுத்து, வீதியை ஜே.சி.பி. இயந்திரம் மூலம் துப்புரவு செய்து, பாவனைக்குரிய வீதியாக செப்பனிடும்பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியிலுள்ள 150 இற்கும் மேற்பட்ட விவசாயிகளின் மிக நீண்ட கால கோரிக்கையாக அமைந்த இந்த வீதிப் புனரமைப்பு, விவசாயிகளுக்கு கிடைத்த வெற்றியாகவே பார்க்கப்படுகின்றது. (எ)

# சாய்ந்தமருதில் தீவிர சுகாதார பரிசோதனை

சாய்ந்தமருது, பெப். 02

அம்பாறை மாவட்டம், சாய்ந்தமருது பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி ஜே. மதன் வழிகாட்டலில் நேற்று முன்தினம் சாய்ந்தமருது சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தீவிர சுகாதார பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன் ஒரு பகுதியாக, சாய்ந்தமருது பிரிவுக்குட்பட்ட சில்லறை விற்பனை நிலையங்கள் விரிவான சுகாதார பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. பொதுமக்களின் சுகாதார பாதுகாப்பை உறுதி செய்வதுடன், உணவு பாதுகாப்பு விதிமுறைகள் முறையாக பின்பற்றப்படுகிறதா? என்பதை கண்காணிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (எ-06)

# காரைதீவில் சங்காபிஷேகம்



காரைதீவு, பெப். 02

அம்பாறை- காரைதீவு பாலையடி வால விக்னேஸ்வரர் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் பிரதம குரு சிவசிறீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

(எ-09)

# அரசாங்கத்தின் முடிவுக்கு இணங்கப்போவதில்லை!

## அமைச்சருடம் வர்த்தகர்கள் வாக்குவாதம்

தம்புள்ளை, பெப். 02

எமது வர்த்தக நிலையங்களை அரசாங்கம் நியமித்துள்ள குழு நிர்வகிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்று வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் முன்னணி பொருளாதார மத்திய நிலையங்கள் ஐந்தினை நிர்வாக கட்டமைப்பிலிருந்து நீக்கி,

தனியான தொரு நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்துக்குத் தாம் எதிர்ப்பு தெரிவிப்பதாக பொருளாதார மத்திய நிலையங்களின் வர்த்தக நிலைய உரிமையாளர் கள், விடயத்துக்குப் பொறுப் பான அமைச்சர் வசந்த சமரசிங்க விடம் அறிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் வர்த்தக, வணிக,

உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க வின் தலைமையில் நடை பெற்ற கலந்துரையாடலின் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

புதிய நிறுவனமொன்றை ஸ்தாபித்து, 7 பணிப்பாளர்களை நியமித்து, தற்போது முகாமைத்துவ நிதியத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் நாட்டின் ஐந்து பொருளாதார மத்திய நிலையங்களை இந்த நிறுவனத்தின் கீழ் கொண்டுவருவது குறித்து வர்த்தகர்களுக்கு தெளிவுபடுத்தும் கூட்டம் நடைபெற்றது.

இதில் விடயத்துக்குப் பொறுப்பான பிரதி அமைச்சர் சுனில் பியன்வில, அரச அதிகாரிகள், தம்புள்ளை பொருளாதார மத்திய நிலைய வர்த்தக சங்க உறுப்பினர்கள் மற்றும் பொருளாதார மத்திய நிலைய முகாமைத்துவ நிதியத்தின் குழுவினரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, அமைச்சர் வசந்த சமரசிங்கவுக்கும் வர்த்தகர்களுக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

வர்த்தக சமூகத்தினர் அமைச்சரிடம் நேரடியாக தெரிவிக்கையில்,

இந்த வர்த்தக நடவடிக்கைகள் 35 வருடங் களுக்கும் மேலாக வர்த்தகர் களாலேயே முன்னெடுத்துச் செல்லப்பட்டது.

எந்தவித முன்னறிவிப்பும் இன்றி,

திடீரென அமைச்ச ருக்கு தேவையான குழுக்களை நியமித்து தமது வர்த்தக நிலையங்களை நிர்வகிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்றும் வர்த்தகர்கள் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

இதற்கு அமைச்சர் பதில் வழங்க முற்பட்டபோது, வர்த்தகர்களுக்கும் அமைச்சருக்கும் இடையில் கடுமையான வார்த்தைப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

இதன் போது, ஜனாதிபதி அநுரகு மார திஸநாயக்க தம்புள் ளைக்கு வந்து,

தேர்தல் வாக் குறுதியாக 30 வருடகுத்தகை ஒப்பந்தத்தை பொருளாதார மத்திய நிலைய வர்த்தகர்களுக்கு வழங்குவ தாக கூறியதையும் வர்த்தகர்கள் அமைச்சரிடம் நினைவு கூர்ந்தனர்.

(எ)

# நுவரெலியா, மாத்தளையில் மழை பெய்யும்

கொழும்பு, பெப்.02

வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது- இவ்வாறு வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக வீசக் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது(எ)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மனிதவுரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு

கல்முனை, பெப். 02

அம்பாறையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் எதிர்நோக்கும் பாதுகாப்பு பிரச்னைகள் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் தெஹிதெனிய மற்றும் ஆணையாளர், பணிப்பாளர்கள் அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதிக்கு நேற்று முன்தினம் பயணம்ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

அத்துடன் கல்முனை பகுதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் வைத்து சிவில் அமைப்பின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

கல்முனை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் நெறிப்படுத்தலில் குழுக் கலந்துரையாடல் நடைபெற்றதுடன் சிவில் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது தற்போதைய சூழலில் சிவில் அமைப்புகள் செயல்படுவதால் ஏற்படும் சவால்கள் அண்மையில் நடந்து கொண்டிருக்கும் மனித உரிமை மீறல்கள் பற்றியும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இணைந்து செயல்படுவதற்கான பொறிமுறைகள் பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கலந்து கொண்டு ஆணைக்குழுவிடம் கோரிக்கைகளை முன்வைத்தனர். இந்தக் குடும்ப உறுப்பினர்கள் எதிர்நோக்கும் பாதுகாப்புப் பிரச்னைகள் சட்ட ரீதியாகவுள்ள உரிமைகள் பற்றியும் இதனை பிரயோகிக்கின்ற போது ஏற்படுகின்ற சவால்கள் பற்றியும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. மேலும், அம்பாறை மாவட்டத்தில் கரும்பு விவசாயிகளின் உணவுப் பாதுகாப்பு மற்றும் காணி உரிமை சம்பந்தமாகவும் நுரைச்சோலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சுனாமி வீடமைப்புத் திட்டம் மக்களிடம் இருபது வருடங்களுக்கு மேலாக கையளிக்கப்படாமை பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இதற்கு மேலதிகமாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் நிர்வாக ரீதியான பிரச்னைகள் பற்றியும் அதனால் பொதுமக்கள் எதிர்நோக்கும் நிர்வாகக் குறைபாடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இதன் போது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் தெஹிதெனிய கூறுகையில்,

"மக்களின் கோரிக்கைகளை ஆணைக்குழு உரிய கவனமெடுத்து நடவடிக்கை எடுக்கப்படும். அரசாங்கம், மனித உரிமைகளை மேம்படுத்தி பாதுகாக்க வேண்டியது அவசியம். மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு ஆளணி பற்றாக்குறை உள்ளது. இருப்பினும், சிவில் சமூகங்களுடன் இணைந்து வினைத்திறனுடன் பல்வேறு தீர்வுகளை பெற முடியும்."- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிவுல்...

மக்களின் பூர்வீக நிலப் பகுதிகள் பெருமளவில் பறிபோகும் என்பதுடன் குடியேற்றங்கள் மூலமாக குடிப்பரம்பலும் திட்டமிட்ட முறையில் மாற்றியமைக்கப்படும் என்று கூறப்படுகிறது.

2011ஆம் ஆண்டு அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவையால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் திட்டம் எதிர்ப்புகள் மற்றும் நிதி பிரச்னையால்கிடப்பில் போடப்பட்டது. இந்த நிலையில், இந்தத் திட்டத்தை 2 ஆயிரத்து 350 கோடி ரூபாயில் செயல்படுத்த தற்போதைய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கைக்கான...

கொண்டவராவார்.

இந்த நியமனமானது இலங்கை திருச்சபைமீது திருத்தந்தை கொண்டுள்ள ஆழமான அக்கறையை வெளிப்படுத்துகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## உண்ணாவிரதமிருந்த...

போராட்டம் நேற்றைய தினம் ஏழாவது நாளாக முன்னெடுக்கப்பட்டிருந்தது.

7 வருடங்களாக பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் தங்களை உடனடியாக ஆசிரியர் சேவைக்கு உள்வாங்குமாறு கோரி இலங்கை பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் ஜனாதிபதி செயலகம் முன்பாக இந்தச் சாகும் வரையிலான உண்ணாவிரத போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை தெரிந்தததே. (ஐ)

## இலங்கைக்கு...

பாராளுமன்றத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சமர்ப்பித்தார்.

அதில், இந்தியாவின் "அண்டை நாடுகளுக்கே முன்னுரிமை" கொள்கையின் அடிப்படையில், இலங்கைக்கு வழங்கப்படும் நிதியுதவி அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 300 கோடி இந்திய ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் இந்த ஆண்டில் 100 கோடி ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தியா ஒதுக்கியுள்ள இந்த நிதி இலங்கையில் முன்னெடுக்கப்படும் வளர்ச்சி திட்டங்கள், மனிதாபிமான உதவிகள் மற்றும் பரஸ்பர ஒத்துழைப்புத் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## மாகாண...

குழுவுக்கு ஆளும் தரப்பில் இருந்து இன்னும் பெயர் பரிந்துரைகள் முன்வைக்கப்படவில்லை என்று மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "மாகாண சபைகள் தேர்தலில் காணப்படும் சட்ட சிக்கல்களுக்கு விரைவில் தீர்வுக் காணப்படும். அதற்குரிய ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. சகல தரப்பினருடன் கலந்துரையாடி முரண்பாடற்ற தீர்வை எடுக்க வேண்டும். எவ்வாறாயினும், இந்த ஆண்டு மாகாண சபைகள் தேர்தலை நடத்துவது சாத்தியமற்றது. டித்வா புயல் தாக்கத்தின் பின்னர் ஏற்பட்ட பாதிப்புகளில் இருந்து மக்களை மீட்டெடுக்க வேண்டும். இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் திட்டத்துக்கு முன்னுரிமை வழங்கப்படும் - என்றார்.

அண்மையில் பாராளுமன்ற குழுக் கூட்டம் ஒன்றின் பின்னர் வடக்கு, கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களை அமைச்சர் சந்தித்தார். அப்போது, மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் மாகாண சபைகள் தேர்தலை நடத்தவதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் விரைவுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மாகாணசபை...

விடயங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக எதிர்க்கட்சிகளின் பாராளுமன்ற குழுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை எதிர்க்கட்சி தலைவர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இதில், மாகாண சபைகள் தேர்தல் குறித்து விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது. மாகாண சபைகள் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிப்பதற்கும் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்து ஆராயப்படவுள்ளது.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை வெகுவிரைவில் பாராளுமன்றத்துக்குக் கொண்டு வருவோம். பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் எதிர்க்கட்சிகளைவிட ஆளும் தரப்பினரே அதிக அக்கறை கொண்டுள்ளார்கள் என்பது தெளிவாக வெளிப்படுகிறது.

அரசாங்கத்தின் தவறுகளை சுட்டிக்காட்டும்போது அதனை ஏற்றுக்கொள்ளும் மனோநிலை ஆளும் கட்சிக்குக் கிடையாது. புதிய கல்வி மறுசீரமைப்பில் காணப்பட்ட குறைகளை சுட்டிக்காட்டினோம். இறுதியில் நாங்கள்தான் கல்வி மறுசீரமைப்பை பிற்போட்டோம் என்று அரசாங்கம் குறிப்பிடுகிறது. இது அரசாங்கத்தின் பலவீனத்தை வெளிப்படுத்துகிறது - என்றார். (ஐ)

# கொட்டும் மழைக்குள்ளும் தையிட்டியில் போராட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 02

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்றைய தினம் கொட்டும் மழையிலும் போராட்டம் நடைபெற்றது.

மக்களின் காணிகளை பிடித்து அடாத்தாக அமைக்கப்பட்ட அந்த விகாரையை அகற்ற வேண்டும். மக்களின் காணிகளை மீண்டும் அவர்களிடமே வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.




ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் அதற்கு முதல் நாளிலும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. நேற்று முன்தினம் மாலையும் நேற்று காலை முதல் மாலை வரையும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய தினம் கொட்டும் மழையில் நனைந்தவாறு போராட்டக்காரர்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

போராட்ட இடத்தில் ஏராளமான பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

(ஐ)

# கல்வி மறுசீரமைப்பின் மூலம் அரசு குழப்பம் ஏற்படுத்தியுள்ளது

### இலங்கை ஆசிரியர் சங்கம் சாடல்

கொழும்பு, பெப்.02

தேசிய கல்வி நிர்வகம் தற்போது முதலாம் தரத்துக்கு ஆரம்பித்திருக்கும் பாடத்தொகுப்பு இரண்டாம் தவணைக்கு இன்னும் அச்சிடப்படவில்லை. ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படவும் இல்லை. இந்த நிலையில் கல்வி மறுசீரமைப்பின் மூலம் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கும் அரசாங்கம், தற்போது அதனை நியாயப்படுத்த நாடு பூராகவும் கூட்டங்களை நடத்தி வருகிறது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கையை அரசாங்கம் தனிக் கட்சியாகவே மேற்கொண்டு வருகிறது. அத்துடன் இந்த கல்வி மறுசீரமைப்பு முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் விக்கிரமசிங்க கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் முன்னெடுத்த மறுசீரமைப்பின் தொடர்ச்சியாகும் என ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நஜித் இந்திக்க தெரிவித்திருந்தார்.

ரணில், கோட்டா காலத்தில் இடம்பெற்ற கல்வி மறுசீரமைப்பானது, கல்வியை தனியார் மயமாக்கும் மறுசீரமைப்பாகும். இந்த மறுசீரமைப்புக்கு மக்கள் விடுதலை முன்னணி எதிர்ப்பு தெரிவித்து வந்தது. தற்போது அதனையே முன்னெடுத்துச் செல்கிறார்கள்.

கல்வி மறுசீரமைப்பு மேற்கொள்ளும்போது கன்னங்கரா கொள்கையை பின்பற்றுமாறே தெரிவிக்கிறோம். அதாவது கல்வியில் சமமான சந்தர்ப்பம், பெற்றோர்களின் வருமானத்துக்கமைய கல்வியை வித்தியாசப்படுத்தாமை போன்ற விடயங்களையே மறுசீரமைப்பின்போது முன்னெடுத்துச்செல்லுமாறு தெரிவிக்கிறோம் - என்றார்.

(ஐ)

## புதன்...

வளிமண்டல சுழற்சி காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் தற்போது கிடைத்து வரும் மழை நாளை மறுதினம் புதன் கிழமை வரை தொடரும். இதேவேளை இந்த மழை மத்திய, வட மத்திய, வட மேல், ஊவா, சபரகமுவா மற்றும் மேல் மாகாணங்களிலும் புதன்கிழமை வரை தொடரக்கூடும்.

வடக்கு மாகாணத்தின் பல குளங்கள் மீண்டும் வான் பாயத் தொடங்கியுள்ளன. மழை தொடரும் நிலைமை உள்ளதால், இந்த நிலை நாளை மறுதினம் வரை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, குளங்களின் வான் பாயும் தாழ் நிலப்பகுதிகளில் உள்ள மக்கள் இது தொடர்பாக விழிப்பாக இருப்பது அவசியம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நெல் அறுவடை மற்றும் நெல் உலர விடும் செயல்பாடுகளை மேற்கொள்ளும் விவசாயிகள் இந்த நாட்களில் அவற்றை தவிர்க்க வேண்டும்.

விதைப்பு காலத்தின் சீரற்ற மழை, டித்வா புயல் மற்றும் வெள்ளம், நோய்கள், குறைவான சந்தை விலை போன்ற பல நெருக்கடிகளில் நெல் செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகள் உங்கள் நெல் அறுவடையையும் நெல் உலர விடும் செயல்பாட்டையும் திட்டமிட்டு மேற்கொண்டு அவற்றை பாதுகாத்துக் கொள்ளுங்கள் - என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ-02)

## பெண்கள்...

ஒழுங்குகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

இந்த வர்த்தமானி அறிவிப்பு தொழிலாளர் அமைச்சரான அனில் ஜயந்த பெர்னாண்டோவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, பணியாளர்கள் இரவு பணியில் ஈடுபடும் நேரங்களில் அல்லது பணி முடிந்த பின்பு, அவர்களின் இருப்பிடத்துக்கு செல்ல ஏற்ற தங்குமிடம் அல்லது போக்குவரத்து வசதிகளை வேலைவாய்ப்பு வழங்குநர் ஏற்பாடு செய்ய வேண்டும் என கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், பணியாளர்களின் உடல்நலம், பாதுகாப்பு மற்றும் பொது நலன் தொடர்பான பொறுப்பும் வேலைவாய்ப்பு வழங்குநரிடமே இருப்பதாக இந்த புதிய ஒழுங்குவிதிகளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## இருபது...

வைக்கப்பட்டது.

இலங்கை, இந்தியா இணைந்து இந்த ஆண்டு இருபது - 20 கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடரை நடத்துகின்றன. இந்த உலகக் கிண்ணம் நாட்டின் பல்வேறு இடங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நிலையில், உலகக் கிண்ணம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வடக்கு மாகாணத்துக்கு எடுத்து வரப்பட்டது.

வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களை தொடர்ந்து நேற்று பிற்பகல் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு உலகக் கிண்ணம் எடுத்துவரப்பட்டது. பண்பாட்டு நிகழ்வுகளை தொடர்ந்து அங்கு உலகக்கிண்ணம் காட்சிப்படுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து நல்லூர் ஆலய முன்றல், துரையப்பா பொது விளையாட்டரங்கம், யாழ். கோட்டை, யாழ். பொதுநூலகம் ஆகிய இடங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டன. ஏராளமான மக்கள் திரண்டு உலகக் கிண்ணத்தை பார்வையிட்டதுடன், ஒளிப்படங்களும் எடுத்தனர். (ஐ-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## துப்பாக்கி சூடுகளுடன் தொடர்பு சந்தேகநபர்கள் இருவர் கைது!

கொழும்பு, பெப். 02

கொழும்பின் புறநகர் பகுதிகளான தெகிவளை, கொஹூவளை பகுதிகளில் இடம்பெற்ற 2 வெவ்வேறு துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாண தெற்கு பிராந்திய குற்றத் தடுப்பு பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

தெகிவளையில் கடந்த 9ஆம் திகதி விருந்தகம் ஒன்றுக்குள் புகுந்தவர்கள் அதன் உரிமையாளரை சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதேநேரம், கடந்த டிசெம்பர் 12ஆம் திகதி கொஹூவளை - போதியாவத்தையில் ஓட்டோவில் பயணித்தவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த இரு துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களுக்கும் உதவியவர்கள் என்ற சந்தேகத்திலேயே இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். 18 வயதான அந்த சந்தேகநபர்களிடமிருந்து 14 கிராம் 730 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# புதிய அரசமைப்பு உருவாக்கம்; வெறும் அறிவிப்பாகவே உள்ளது

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 02

நிறைவேற்று அதிகாரம்மிக்க ஜனாதிபதி முறைமையை இரத்து செய்யவும் புதிய அரசமைப்பை உருவாக்கவும் அரசாங்கம் ஆரம்பகட்ட நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. புதிய யாப்பு உருவாக்கத்துக்கான எண்ணக்கரு பத்திரம் சமர்ப்பிக்கப்படும் என்று பிரதமர் குறிப்பிட்டது இன்றளவில் வெறும் அறிவிப்பாகவே காணப்படுகிறது", என்று ஐக்கிய மக்கள் சக்தியி பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்பு தொடர்பில் அவரிடம் கேள்வி எழுப்பியபோதே மேற்கண்டவாறு அவர் கூறினார்.

மேலும், "புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகளை விரைவுபடுத்தி ஆட்சிக்கு வந்தவுடன் புதிய யாப்பை உருவாக்குவதாக தேசிய மக்கள் சக்தி நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கியது. ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் நிறைவடைந்துள்ளது.

ஆனால், புதிய அரசமைப்பு உருவாக்கம் பற்றியோ அல்லது நிறைவேற்று அதிகாரம்மிக்க ஜனாதிபதி முறைமை நீக்கம் பற்றியோ பாராளுமன்றத்திலோ அல்லது பொது இடங்களிலோ எதுவும் குறிப்பிடவில்லை. நிறைவேற்று அதிகாரம்மிக்க ஜனாதிபதி பதவியின் மோகத்துக்கு அநுரவும் அடிபணிந்து விட்டார் என்றே தோன்றுகிறது. அவர் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கத்தில் மௌனம் காக்கிறார்.

புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும், மாகாண சபை முறைமை பலப்படுத்தப்பட வேண்டும். புதிய யாப்பு உருவாக்கம் தொடர்பில் எண்ணக்கரு பத்திரம் சமர்ப்பிக்கப்படும் என்று பிரதமர் பாராளுமன்றத்துக்கு அறிவித்தார். எவ்வித ஆரம்பகட்ட நடவடிக்கைகளும் எடுக்காத காரணத்தால் மூன்று மாதங்களுக்கு பின்னரும் அதே கேள்வியை கேட்டேன் அதற்கும் எண்ணக்கரு பத்திரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என்றே பதிலளித்தார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் எண்ணக்கரு பத்திரம் சமர்ப்பிப்பு என்பது வெறும் அறிவிப்பாகவே காணப்படுகிறது. புதிய அரசமைப்பு உருவாக்கத்துக் குரிய ஆரம்பகட்ட எவ்வித நடவடிக்கைகளையும் அரசாங்கம் இது வரையில் எடுக்கவில்லை - என்றார். (ஐ)

## பேருந்து கட்டணங்களை அதிகரிப்பது அவசியம்!

### தனியார் பேருந்து சங்கம்

கொழும்பு, பெப். 02

"எரிபொருள் விலை சிறிதளவு குறைக்கப்பட்ட போதிலும் எதிர்வரும் மாதங்களில் பேருந்து கட்டணங்களை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும்" என்று இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்பு மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளில் நிலவும் கடுமையான போக்குவரத்து நெரிசலால் பேருந்துகளை இயக்குவதில் பெரும் நட்டம் ஏற்படுகிறது. தேசிய பேருந்து கட்டண கொள்கையின்படி, கொழும்பில் ஒரு லீற்றர் டீசலுக்கு 2.5 முதல் 3 கி. மீ. வரை பேருந்துகள் பயணிக்க வேண்டும். ஆனால், தற்போது நிலவும் கடும் வாகன நெரிசலால், ஒரு லீற்ற ருக்கு 2 கி. மீற்றருக்கும் குறைவான தூரமே பயணிக்க முடிகிறது.

இந்த நஷ்டத்தை ஈடுகட்ட வேண்டுமானால், எதிர்வரும் ஜூலை மாதத்துக்கு முன்னதாக கட்டணத் திருத்தம் அவசியம். குறுகிய தூர சேவைகளுக்கான ஆரம்ப கட்டணத்தை 5 முதல் 6 ரூபாயால் அதிகரிக்க வேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## அரசுக்கு எதிரான போராட்டத்தில் சஜித் 2ஆவது நாளாகவும் பங்கேற்பு

கொழும்பு, பெப். 02

ஜனாதிபதி செயலகம் முன்பாக பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட உண்ணாவிரத போராட்டத்தில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று இரண்டாவது நாளாகவும் கலந்து கொண்டார்.

ஜனாதிபதி செயலகம் முன்பாக நடைபெற்று வரும் போராட்ட இடத்துக்கு நேற்றைய தினம் அங்கு வந்த எதிர்க்கட்சி தலைவர் போராட்டக்காரர்களுடன் உரையாடினார். தொடர்ந்து, ஊடகங்களிடம் பேசிய அவர்,

"எனதும், ஐக்கிய மக்கள் சக்தியினதும் ஐக்கிய மக்கள் கூட்டணியினதும் அதேபோன்று கட்சி பேதமின்றி அனைவரினதும் உச்சபட்ச ஆதரவை இந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்காகவே நான் இன்றும் இங்கு வந்தேன். 5 முதல் 10 வருடங்கள் பிள்ளைகளுக்குக் கற்பித்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஆசிரியர் சேவையில் இணைய உரிமையில்லையா? ஏன் அவர்களுக்கு ஆசிரியர் சேவையில் இணையத் தடை விதிக்கப்பட்டுள்ளது? மிகவும் தெளிவான தீர்வொன்று உள்ளது. அரசாங்கத்துக்கும் இந்தத் தீர்வு தெரியும்.

ஆனால், தற்போதைக்கு அரசாங்கம் உறுதியளித்ததை நிறைவேற்றாமல் இந்தப் பிரச்னையிலிருந்து தப்பிக்கப் பார்க்கிறது. இந்த ஆசிரியர்களுக்கு நீதி கிடைக்கும் வரை நாம் எப்போதும் இவர்களுடன் இருப்போம்." -என்றார். (ஐ)

## வீதிகளில் வேகக்கட்டுப்பாட்டை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை!

கொழும்பு, பெப். 02

வீதிகளுக்கான வேகக் கட்டுப்பாட்டைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய வீதி பாதுகாப்பு சபை தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கை எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் நடைமுறைக்கு வரும் என்றும் அதற்கான பணிகள் தற்போது, இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன எனவும் அந்த சபையின் தலைவர் மஞ்சுள குலரத்ன தெரிவித்துள்ளார்.

வாகனங்களின் வேகத்தை குறைப்பதற்கு அல்லது வேகத்தை அதிகரிக்க வேண்டிய வீதிகளை அடையாளம் காணவும் அதற்கு தேவையான ஏற்பாடுகளை வழங்கும் வகையில் தரவுத்தளத்துக்கான புதுப்பிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான போதைப்பொருளுடன் ஒருவர் கைது

கொழும்பு, பெப். 02

50 இலட்சம் ரூபாய் பெறுமதியான 500 கிராம் 'ஐஸ்' போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தென் மாகாணத்தின் பாதாள உலகக் குழுவை சேர்ந்தவரான 'உனகுறுவே சாந்த' என்பவரால் முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் கைமாற்றம் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

களுத்துறை - அளுத்கம ரயில் நிலையம் அருகே இடம்பெற்ற இந்த கைமாற்றத்தை தடுக்க பொலிஸார் அங்கு சிவில் உடையில் காத்திருந்தனர்.

இதன்போது, ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 500 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பொலிஸ் அதிகாரிகளின் சம்பளம் அவர்களின் அர்ப்பணிப்புக்கு போதாது

### ஆராய அமைச்சரவை உபகுழு நியமனம்

கொழும்பு, பெப். 02

பொலிஸ் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் சம்பளமானது அவர்கள் வழங்கும் அர்ப்பணிப்புக்கு போதுமானதாக அமையவில்லை. சம்பளம் குறித்து ஆராய அமைச்சரவை உபகுழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது - இவ்வாறு பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பு பொலிஸ் குற்றப் பிரிவில் நடந்த நிகழ்வு ஒன்றிலேயே கடந்த வெள்ளிக்கிழமை அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், "பொலிஸ் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் சம்பளம், அவர்கள் வழங்கும் அர்ப்பணிப்புக்கு போதுமானதாக அமையவில்லை என்பதை நாம் அறிந்துள்ளோம். இது தொடர்பில் அரசாங்கத்துக்கு தெளிவுபடுத்திய நிலையில், அது குறித்து ஆராய அமைச்சரவை உபகுழு ஒன்று நியமிக்கப்பட்டது.

அந்த குழுவுக்கு தேவையான அளவு எமது யோசனைகளை நாம் முன்வைத்துள்ளோம். இது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கிறோம். அதே நேரம் பொலிஸ் துறையில் 32 ஆயிரம் பொலிஸ் அதிகாரிகளுக்கு பற்றாக்குறை உள்ளது. இந்த வருடத்தில் 2 ஆயிரத்து 500 பேரும் அடுத்த வருடத்தில் 2 ஆயிரத்து 700 பேரும் ஓய்வு பெறவுள்ளனர். எனவே, அவர்களை யாரும் தடுக்க முடியாது.

இந்த நிலையில் பொலிஸ் துறையில் புதிதாக 10 ஆயிரம் பேரை சேவையில் உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும். "- என்றார். (எ)

## எதிர்வினையாற்றும் தார்மீக உரிமை இந்த அரசுக்கு இல்லை

### விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

கொழும்பு, பெப். 02

"அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் கோரிக்கைக்கு எதிர்வினையாற்ற இந்த அரசாங்கத்துக்கு தார்மீக உரிமை இல்லை", என்று விமல் வீரவன்ஸ குறிப்பிட்டுள்ளார்.

7 வருடங்களாகப் பாடசாலைகளில் கற்பித்தலில் ஈடுபடும் தங்களை உடனடியாக ஆசிரியர் சேவையில் உள்வாங்குமாறு கோரி இலங்கை பாடசாலை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் ஜனாதிபதி செயலகம் முன்பாக போராட்டம் நடத்தி வருகிறது. இதில், பாதிக்கப்பட்ட நால்வர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், இருவர் தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

நேற்றைய தினம் அங்கு சென்ற விமல் வீரவன்ஸ ஊடகங்களிடம் பேசியபோது,

"இதை மனிதாபிமானத்துடன் பார்க்க வேண்டும். இவர்களுக்கு நீதி வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேறு அரசாங்கத்துக்கு இவ்வாறான கடுமையான எதிர்வினையாற்ற உரிமை இருந்தாலும் இந்த அரசாங்கத்துக்குத் தார்மீக உரிமை இல்லை. காரணம், இவர்கள் அன்று இந்தக் கோஷங்களை உயரிய அளவில் ஏற்றுக் கொண்டவர்கள். அவற்றை நிறைவேற்றுவோம் என்று அவர்களுக்கு அதிகபட்ச நம்பிக்கை கொடுத்தவர்கள்..." என்றார். (ஐ)

## அவசரகால நிலைமை ஒரு மாதத்துக்கு நீடிப்பு

கொழும்பு, பெப். 02

நாட்டில் பொது அவசரகால நிலையை பிரகடனப்படுத்தி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 28 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் உத்தரவுக்கமைய

இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அனர்த்த நிலைமையைக் கருத்தில் கொண்டு, ஜனாதிபதியால் கடந்த நவம்பர் 28 ஆம் திகதி பொது பாதுகாப்பு, நாட்டின் நல்வாழ்வைப் பாதுகாத்தல் மற்றும் பொதுமக்களின் வாழ்க்கைக்கு அவசியமான விநியோகங்கள் மற்றும் சேவைகளைப் பேணுதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு பொது அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.02.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.